# ரஷியா ஜனாதிபதி லாட்மிர் பூட்டினுடன் நமது பிரதமர் கொண்ட தொலைபேசி உரையாடல்

மார்ச் 18,2014

ரஷியா ஜனாதிபதி லாட்மிர் பூட்டினுடன் நமது பிரதமருக்கு இன்று இரவு 7.30 மணி அளவில் உக்ரைன் நிலவரம் பற்றியும் கிரிமியாவின் சமீபத்திய வாக்கெடுப்பு பற்றியும் தொலைபேசி மூலம் உரையாடினர்.

உக்ரைனின் சமீபத்திய முன்னேற்றங்கள் தொடர்பாக ரஷிய நிலவரத்தை பற்றி விவரித்ததற்கு ரஷிய ஜனாதிபதிக்கு பிரதமர் நன்றி கூறினார்.நாடுகளின் ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு குறித்து இந்தியா கொண்டுள்ள நிலைப்பாட்டை அவர் வலியுறுத்தினார்.அனைத்து தர்ப்பினரும் பொறுமையாக இருந்து அரசியல் மற்றும் இராஜதந்திர தீர்வுகளை கண்டறிய ஆக்கப்பூர்வமாக ஒன்றிணைந்து செயல்படுமாறு கேட்டுக்கொண்டார்.இதனால் பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளின் நலமும் பாதுகாக்கப்படுவதோடு ஐரோப்பா மற்றும் அப்பால் உள்ளவற்றில் நீண்ட கால அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை இருக்க உறுதி செய்யும் என்றார்.

இந்தியாவிர்க்கும் ரஷியாவிற்கும் இடையே உள்ள பரஸ்பர நலனை பரப்பும் கூட்டை பற்றியும் நெருங்கிய உறவை பற்றியும் சிறப்பு மற்றும் சலுகை பெற்ற மூலோபாய கூட்டொடு இணைக்கப்பட முக்கியத்துவம் பற்றியும் பிரதமர் மற்றும் ஜனாதிபதி உறுதிபடுத்தி கொண்டார்கள். பிரதமர் மேலும் சமீப ஆண்டுகளில் இந்தியா, ரஷ்யா மூலோபாய கூட்டு ஆழ்ந்து வலுப்படுத்த அவரது தனிப்பட்ட தலைமைக்காக ஜனாதிபதி புட்டினுக்கு நன்றி தெரிவித்தார்.